REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: வைகாசி 9உ திங்கள் (23—5—55) ★ ★ வெளியூர்: வைகாசி 10உ செவ்வாய் (24—5—55) [இதழ் 292

நிதி மந்திரிக்கு ரூ. 2-4-0 அபராதம்

காரை வேகமாக ஓட்டியதற்காக போலீசார் தந்த தண்டனை!

ஹெர்பிரிட்ஜ் ஷா பெர் என்ற மேற்கு ஜெர்மன் நிதி மந்திரி, பவேரியாவில் உள்ள வெய்சன்பர்க் என்னுமிடத்திற்கு அருகில் உள்ள பாதுகாப்பற்ற 'லெவல் கிராசிங்' அருகில் அதிக வேகமாகக் காரை ஓட்டிச் சென்றமைக்காக, அந்த இடத்திலேயே ஒரு போலீஸ்காரரால் 2 மார்க்குகள் (சுமார் ரூ. 2—4—0 அபராதம் விதிக்கப்பட்டார் என்று தெரிகிறது.

குடியரசுத் தலைவரானாலும் கூறியது குற்றமே!

டாக்டர் இராசேந்திர பிரசாத்—டாக்டர் கட்ஜு மோதல்!

'வேலையற்றோர் என்ற இனத்தை உருவாக்குகிறது'

'மாணவர்களை தகுதியற்றவர்களாக மாற்றுகிறது'

நடைமுறைக் கல்வி பற்றி குடியரசுத் தலைவர் இராசேந்திரர் கூற்று

"இப்பொழுதுள்ள கல்வி முறை 'வேலையில்லாதோர்' என்ற ஒரு இனத்தையே உற்பத்தி செய்வதுடன், எந்தக் காரியமும் ஆற்றுவதற்கு தகுதியற்றவர்களாக மாணவர்களை மாற்றிவிடுகிறது;

"இந்தியாவில் முன்பு ஆட்சி புரிந்தவர்களால் புகுத்தப்பட்ட இந்தக் கல்வி முறையால், நமது நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள ஒருக்காலும் முடியாது;

"இந்தக் கல்வி முறையின் மோசமான அம்சம் எதுவென்றால், இக்கல்வி முறை, வேலையற்றோரின் எண்ணிக்கையை நேரடியாக அதிகரிப்பதுதான்; அதனால்தான், படித்தவரிடையே வேலையற்றோரின் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கிறது;

"எனவே, வேலையற்றோர் பிரச்சினைக்கு நீண்டகாலப் பரிகாரமாக அமையக்கூடியது, இப்போதுள்ள கல்வி முறையை மாற்றி அமைப்பதுதான். அப்படிச் செய்தால்தான் உடலுழைப்பு நிந்திக்கப்படாமலிருக்கும்."

—இவ்வாறு, இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திர பிரசாத், புதுடில்லியிலுள்ள 'அரிசன் உத்தியோக சாலா' எனும் பள்ளி ஒன்றில் பட்டமளிப்பு விழாக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் சொன்னார்:

"இப்போதுள்ள கல்வி முறையில் தேவையான மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்றுதான் சர்க்கார் ஆவலாயிருக்கிறது;

"ஆதாரக் கல்வி முறை, பெற வேண்டிய நியாயமான ஆதரவைப் பெறவில்லை என்பதைக் காண வருந்துகிறேன்; என்றாலும், பல மாநில அரசாங்கங்களும், படிப்படியாக அந்தக் கல்வி முறையை ஏற்றுவருவதைக் காண மகிழ்கிறேன்."

1955 மார்ச் மாதத்தில், இந்தியாவிலுள்ள இரும்புக் கனிச் சுரங்கங்களிலிருந்து $3\frac{3}{4}$ - லட்சம் டன் இரும்புக் கனி கிடைத்தது.

பைபிள் புத்தகத்தின் ஒரு பக்கம்!

166 பவுனுக்கு விற்கப்பட்டது

பெர்னே, மே 23—

பிரிட்டன் படிப்பகம் ஒன்றிலிருந்து 1455-ல் கியூடன்பர்க்கால் அச்சிடப்பட்ட முதல் 'பைபிள்' புத்தகத்தின் ஒரு பக்கத்தை மட்டும், ஜினிவா வியாபாரி ஒருவர், சுமார் 166 பவுனுக்கு வாங்கியுள்ளதாகத் தெரிய வருகிறது.

அந்தப் பக்கத்தை விற்பனை செய்த படிப்பகத்தின் பெயர் அறிவிக்கப்படவில்லையாம்!

சமுதாய நலத் திட்டங்களுக்கு

ரூ. 20 கோடி!

"நாட்டின் சமுதாய நலத் திட்டங்களை நிறைவேற்றி வைக்க, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், திட்டக் குழு ரூ. - 20 கோடி தரும்,"

என்று, மத்திய சமுதாய நலக் குழுவின் தலைவரான திருமதி தாராபாய் தேஷ்முக் தெரிவித்திருக்கிறார்.

'இந்தக் கல்வி முறைதானே காந்தியாரைத் தந்தது?'

'குறைகளை மிகைப்படுத்துகின்றனர்'

'நல்ல அம்சங்களை அலட்சியம் செய்கின்றனர்'

நடைமுறைக் கல்வி பற்றி தற்காப்பு மந்திரி டாக்டர் கட்ஜு கருத்து

"இப்போதுள்ள கல்விமுறையின் குறைபாடுகளை பொதுவாகவே மிகைப்படுத்திக் காட்டுவோர் அந்தக் கல்வி முறையில் உள்ள நல்ல அம்சங்களை அலட்சியப்படுத்திவிடுகின்றனர்;

"குறைபாடுகள் இருந்தபோதிலும்கூட, இப்போதைய கல்வி முறை, காந்தியார் போன்ற பெருந்தலைவர்களை உற்பத்தி செய்திருக்கிறது;

"இப்போதுள்ள அந்தக் கல்விமுறையில் உள்ள சில குறைபாடுகளை நீக்க தலைவர்களும், கல்வி நிபுணர்களும் முயற்சித்து வருகின்றனர்;

"மாணவர் சமூகம், இந்தக் கல்விமுறையில் உள்ள குறைபாடுகளைப் பற்றிக் கவலைப்படாதிருப்பதுடன், அவைகளைக் களைந்தெறியும் பணியினை, அனுபவம் பெற்ற முதியோரிடம் விட்டுவிட வேண்டும்."

—இவ்வாறு, இந்தியப் பேரரசின் தற்காப்பு மந்திரி டாக்டர் கே. என் கட்ஜு, புதுடில்லியில் நடைபெற்ற அகில இந்திய மாணவர் காங்கிரசின் 10-வது மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

திட்டங்களில் தென்னாடு புறக்கணிப்பு

நிதி மந்திரி தேஷ்முக் சப்பைக்கட்டு

முன்பே திட்டமிடப்பட்டது என்பதாலேயே

பெரும் திட்டங்கள் வடநாட்டில் இடம் பெற்றனவாம்!

பெங்களூர், மே 22—

"திட்டங்களில் தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது என்பதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது; வடநாட்டில் சில (!) பெரிய திட்டங்களை மேற்கொண்டதற்குக் காரணம், அவை நெடுநாட்களுக்கு முன்பே திட்டமிடப்பட்டவை என்பதும், அவை ஏற்கனவேயே துவங்கப்பட்டிருந்தன என்பதுந்தான்;

"இப்போது தென்னாட்டில் பெரிய திட்டங்கள் (!) துவங்கப்படுகின்றன,"

—என்று இந்தியப் பேரரசின் நிதி மந்திரி சிந்தாமணி தேஷ்முக், வீராப்புப் பேசியிருக்கிறார்.

★

நிதி திரட்டும் வழி!

பத்திரிகையாளரிடம் பேசுகையில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக சுமார் ரூ. 6,300 - கோடி செலவிடப்படும்; அதில் 2,000 கோடி ரூபாய் வரையில் தனிப்பட்டோர் செலவிடுவர்.

"அரசாங்கம் செலவிடும் ரூ. - 4,300 கோடியில் அபிவிருத்தித் திட்டங்களுக்காக மட்டும் 900 - கோடி ரூபாய் செலவிடப்படவிருக்கிறது;

"இந்த இரண்டாம் திட்டத்திற்கு நிதி திரட்டுவதில், ஆண்டுதோறும் சுமார் ரூ. 100 கோடிக்கு புது வரி விதித்தலும், பெரும் அளவு பற்றுக்குறையான வரவு - செலவுத் திட்டம் தயாரிப்பதும் அவசியமானவையாகக் கூடும்.

"5 ஆண்டுகளில் ரூ. 1,000 - கோடி தாண்டி விழும் வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கலாமென்பது பொருளாதார நிபுணர்கள் கருத்து.

"மேலும் பணவீக்கம் ஏற்பட்டால் ஒழிய, ஆண்டுதோறும் உபரியாக புதுவரிகள் மூலம் ரூ. 100 - கோடிக்கு மேல் வசூலிப்பது கடினமானது என்பதை கடந்த கால அனுபவம் நமக்குச் சொல்கிறது; ஆனால், அது முடியாத ஒரு காரியமல்ல. பொதுமக்கள் நிலைமை நன்கு புரிந்து கொள்வதுடன், சர்க்காரும், மக்கள் சபையும் முயற்சித்தால், ஆண்டுதோறும் ரூ. 100 -

(4-ம் பக்கம் பார்க்க)

ஜி. பி. சோமசுந்தரம் அன்னையார் மறைவு

சேலம் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஜி. பி. சோமசுந்தரம் அவர்களின் தாயார் பார்வதியம்மாள் கடந்த 20—5—55 இரவு 9 மணிக்கு; தமது 116-வது வயதில் இயற்கையெய்திய செய்தியறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரை இழந்து வாடும் தோழருக்கும், குடும்பத்தாருக்கும் நமது அனுதாபங்கள் உரித்தாகுக. —ஆசிரியர்.

'அடிமை வாணிபம் ஒழியவில்லை'

'யாத்ரீகர் போர்வை'யில் நீக்ரோவர் விற்கப்படுகின்றனராம்!

மார்சேல்ஸ், மே. 23—

நீக்ரோவர்கள், அடிமைகளாகப் பிற நாடுகளுக்கு விற்கப்படும் 'அடிமை வாணிபம்' இன்னும் உலகில் நடக்கிறது என்று கூறும் செய்தி ஒன்று வெளிவந்திருக்கிறது.

"பிரெஞ்சு மேற்கு ஆப்பிரிக்காவிலிருந்து, ஆண்களும் பெண்களுமாக நூற்றுக்கணக்கான நீக்ரோவர்கள், 'மெக்கா யாத்திரீகர்கள்' என்ற போர்வையில், ஆப்பிரிக்க வியாபாரிகளால், ஏமன், சவூதி அரேபியா போன்ற அராபிய நாடுகளுக்கு அடிமைகளாக விற்கப்படுகின்றனர் என்பதை கடந்த சில மாதங்களாக நான் நடத்திய விசாரணையின்போது ஆதாரபூர்வமாக அறிந்துள்ளேன்,"

என்று; இங்கு நடைபெறும் ரிபப்ளிகன் கட்சிக் காங்கிரசிற்குப் பிரதிநிதியாக வந்துள்ள எம்மானுவல் டாக்ராவெரி என்பவர் குறிப்பிட்டிருக்கிறாராம்.

இதுபற்றி பிரெஞ்சு இரகசிய போலீசார் புலன் விசாரணை செய்து வருவதாகவும் கூறப்படுகிறது.

முன்னாள் பிரதமர் முசாதிக்கின் ஆதரவாளர்கள் ஐவர் கைது

சர்க்காருக்கு எதிராக சதி செய்ததாகக் குற்றச்சாட்டு

தெஹ்ரான், மே 21—

முன்னாள் பிரதமர் டாக்டர் முகம்மது முசாதிக்கின் ஆதரவாளர்களான 5 பேர்கள் மீது சதிக் குற்றம் சாட்டி ஈரான் அரசாங்கம் அவர்களைக் கைது செய்துள்ளது.

முன்பு நடைபெற்ற துரோகச் செயல்களை மீண்டும் தலைதூக்கச் செய்ய அவர்கள் தூண்டியதாகவும் கூறப்பட்டது.

மக்கள் சபையின் முன்னாள் உதவி சபைத் தலைவர் டாக்டர் அப்துல்லா சொர்சாமி, முன்னாள் வெளிநாட்டு மந்திரி பகீர்சாஜெமி, முன்னாள் உள்நாட்டு மந்திரி அமிய அலா ஆகியோர் கைது செய்யப்பட்ட ஐவரில் முக்கியமானவர்கள் என்று தெரியவருகிறது.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 23—5—'55 திங்கள்

எது முட்டாள்தனம்?

" முட்டாள்தனமானது."
" ஞான சூனியமானது."
" குறுகிய நோக்கங்கொண்டது."
" அருவருக்கத்தக்கது."
" வெறுக்கத்தக்கது."

இவ்வாறெல்லாம், இந்தியப் பிரதமர் நேரு பண்டிதர், பஞ்சாப் மொழி வழி மாநிலம் அமைக்கக் கோரி அகாலி தளத்தவர் நடத்தும் கிளர்ச்சி குறித்து தனது வழக்கமான 'பாணி'யில் 'வசை புராணம்' பாடியிருக்கிறார்.

அகாலி தளத்தவர் நடத்தும் பஞ்சாப் மொழிவழி மாநிலக் கிளர்ச்சி, 'சீக்கிய நாடு சீக்கியருக்கே' என்ற மூல முழக்கத்தை உள்ளடக்கியது என்ற அச்சம் வடநாட்டு அரசியல் வாதிகளின் உள்ளத்தை உலுக்குவதால்தான், கோரிக்கைக்காக குரல் கொடுப்பதையே 'கூடாது—ஆகாது' எனத் தடை விதித்து, அந்தத் தடையை அமைதியாக மீறுவோர் மீதும் அவர்கள் அடக்குமுறை அம்புகளை எசி வருகின்றனர் என்று எழுதியிருந்தோமல்லவா?

அதனை உறுதிப்படுத்துவது போன்று, பண்டித நேரு அவர்கள் அண்மையில் புதுடில்லி மாநாடு ஒன்றில் பேசுகையில் அகாலிதளக் கிளர்ச்சி கண்டு தனக்கேற்பட்டுள்ள ஆத்திரத்தை அனல் கக்கும் வசைபுராணங்களால் அளவிட்டுக் காட்டியிருக்கிறார்.

இந்தியத் துணைக் கண்டத்து மக்களின் வாழ்வு, வளம், உழைப்பு, உரிமை அத்தனையையும் கொள்ளையிட்டுச் சூறையாடிக் கொண்டிருந்த வெள்ளை ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்தில், 'அந்த ஏகாதிபத்தியப் பிடியினின்றும் இந்தியத் துணைக் கண்டத்தை மீட்க வேண்டும்,' என்ற எண்ணம் காங்கிரஸ் என்ற இயக்கமாக உருப்பெற்றபோது, அந்தக் காங்கிரஸ், 'இந்தியத் துணைக் கண்டத்தில், பல சுதந்திர நாடுகள் கொண்ட ஒரு கூட்டாட்சி நிறுவ வேண்டும்,' என்ற எண்ணமே கொண்டிருந்தது. அந்த எண்ணத்தினுல்தான், மொழி வழி மாநிலக் கோரிக்கையை, மக்கள் மன்றத்தின் ஆதரவிற்காக வலியுறுத்தி வந்தது, காங்கிரஸ்.

அன்றைய நிலையில், இந்தியத் துணைக் கண்டத்தில், ஒரு மத்திய சர்க்காரின் கீழ் பல மாநில சர்க்கார்களும் இயங்கும் 'யூனியன் ஆட்சி முறை' பற்றிய எண்ணம் காங்கிரசிற்கு இருந்திருக்குமானுல், மொழி வழி ஆட்சி பற்றிய கோரிக்கையை, அன்று காங்கிரசார் எழுப்பியிருக்க நியாயமில்லை. இதனை இன்றைய காங்கிரஸ் காரர்களின் போக்கிலிருந்து யூகிக்கலாம்.

வெள்ளையர் இந்தியாவை விட்டு வெளியேறுகையில், நிர்வாக வசதி கருதி ஆதிக்க நோக்குடன் அவர்கள் அமைத்திருந்த 'யூனியன் ஆட்சி அமைப்பை' விட்டுச் சென்றனர்; அதில் ஒட்டிக்கொண்ட காங்கிரஸ் தலைவர்கள், யூனியன் ஆட்சி அமைப்பினுல் தாங்கள் பெறும் ஆதிக்கத்தின் அளவையும், அதிகாரத்தின் மிகுதியையும் உணர்ந்து கொண்டதுடன், அவற்றில் புதைந்து கிடக்கும் 'பலாபலன்'களையும், 'சுகபோகங்களை'யும் சுவைக்கவும் முற்பட்டனர்.

வெள்ளையர்கள் காலத்தில் தான், 'ஏக இந்தியா' உருவாக்கப்பட்டது என்பதும், அதற்கு முன் இந்தியத் துணைக் கண்டம் முழுவதுமாக எந்த ஒரு காலத்திலும் ஒரே ஆட்சியின்கீழ் இருந்தது கிடையாது என்பதும் வரலாறு கூறும் உண்மைகள். ஆனுல், 'வெள்ளையர்கள் ஆதிக்கத்தினுல் ஒன்ருக்கப்பட்ட பல சுதந்திர நாடுகளின் நிலப்பரப்பை பாகிஸ்தான் நீங்கிய 'ஏக இந்தியா'வாக தாங்கள் பெற்றது முதல், அதனை என்றென்றைக்கும் ஒன்ருகவே வைத்திருக்க வேண்டும் என்ற ஆதிக்க ஆசையும், அதிகார வெறியும் கொண்டலைகின்றனர் வடநாட்டு அரசியல்வாதிகள்,' என்பதற்கு, பண்டிதரின் வசைபுராணம் போதுமான சான்ருகும்!

தாங்கள் சுவைத்து அனுபவித்துவரும் அதிகாரம் ஊட்டியுள்ள வெறிதான், ஒரு காலத்தில் மொழிவழி மாநிலக் கோரிக்கையின் முன்னேடியாகவிருந்த பண்டித நேருவை, இந்நாட்களில் அதே கோரிக்கையை ஈடேற்றிக்கொள்ளக் கிளர்ச்சியில ஈடுபடுவோர் மீது வசை புராணம் பாடத் தூண்டுகிறதுபோலும்!

'மொழி வழியாக இந்தியத் துணைக் கண்டத்தின் மாநில எல்லைகள் வரையப்படுவது, நாளடைவில் அந்தந்த மொழி வழி மாநிலங்கள் மத்திய ஆட்சிப் பிடிப்பிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளும் முயற்சிக்கு வித்திடுவதாகும்,' என்று வடநாட்டு ஆட்சியாளர் கருதுகின்றனர்.

'ஏக இந்தியா'வை பொய்ப்பிக்கும் நமது தனியாட்சிக் கோரிக்கையையும், வட நாட்டவர் தாங்கள் அவ்வாறு கருதுவதற்கு ஆதாரமாகக் கொண்டிருக்கலாம் என்பது மிகையல்ல!

எப்படியிருப்பினும், தாங்கள் சுவைத்துவரும் அதிகார வரம்பு சுருங்கும் என்றெண்ணும்போது, பண்டிதருக்கும், அவரது சகாக்களுக்கும் ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு வருகிறது!

அதனுல்தான், அகாலி தளத்தவரின் மொழிவழிக் கிளர்ச்சியை 'முட்டாள்தனமானது,' என்றெல்லாம் வர்ணிக்கிறார், பண்டிதர்!

எது முட்டாள்தனமானது? பண்டிதர் ஏசும் அகாலிதளத்தவரின் மொழிவழி மாநிலக் கோரிக்கையா? அல்லது, தானே ஊட்டி வளர்த்த ஒன்றை, தனது ஆதிக்க நோக்கம் கருதி, 'முட்டாள்தனமானது' என்று பேசும் தன்மையா?—'எது முட்டாள்தனமானது?'—என்று மக்கள் கேட்கின்றனர்!

எகிப்தின் எதிர்காலம்

நாசர் வரையும் ஓவியம்

கெய்ரோ, மே 19—

இராணுவப் புரட்சியின் விளைவாக பரூக் மன்னர் பதவியிலிருந்து விலக்கப்பட்டபின்னர் ஏற்பட்ட இடைக்காலம், வருகிற 1956 ஜனவரி திங்களுடன் முடிவுற்று, தேசியப் பாராளுமன்ற ஆட்சி நடைபெறும் என்று எகிப்து பிரதமர் கர்னல் நாசர் தெரிவித்திருக்கிறார்.

அடுத்த ஆண்டிலிருந்து துவங்கவிருக்கும் அந்தப் பாராளுமன்ற ஆட்சியில் எல்லாப் பிரிவுகளுக்கும் பிரதிநிதித்துவம் இருக்குமென்றும், ஆனுல் அரசியல் கட்சிகள் அதில் இடம் பெருது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

ஏகாதிபத்தியம், நிலப் பிரபுத்துவம், ஏகபோக உரிமை ஆகியவைகளை ஒழிப்பதும், வலுமிக்க தேசிய இராணுவத்தை ஏற்படுத்துவதும், சமுதாய நியாயம் வழங்குவதும், உண்மையான ஜனநாயக வாழ்வு ஏற்படுத்துவதும்தான் தமது நோக்கங்கள் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இந்தத் தேசியப் பாராளுமன்றம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டதாக இருக்குமா, அல்லது நியமிக்கப்பட்டதாக இருக்குமா என்பது பற்றி அவர் எதும் தெரிவிக்கவில்லை.

டாடா தொழிற்சாலை

பிரிட்டிஷ் இயந்திர சாதனங்களை வாங்குகிறது

நிலக்கரிச் சுரங்கங்களில் கரி எடுத்துச் செல்லும் தொட்டிச் சங்கிலிகளையும், வேறு சில இயந்திரங்களையும் ஒரு பிரிட்டிஷ் தொழிற்சாலையிலிருந்து டாடா கம்பெனி வாங்கியிருக்கிறது. சுமார் 40,000 பவுன்கள் மதிப்புள்ள இந்தச் சாதனங்கள் திக்வாடி, விஜாவா சுரங்கங்களில் அமைக்கப்படும்.

கோதுமை விலை குறைந்தால்!

மத்திய அரசாங்கம் உதவி தருமாம்!

ஒரு மணங்கு கோதுமையின் விலை பத்து ரூபாய்க்கும் குறைந்தால், மேற்படி கோதுமையை வாங்கும் மாகாண சர்க்கார்களுக்கு தேவையான எல்லா நிதி உதவியையும் மத்திய சர்க்கார் அளிக்கும் என்று மத்திய உணவு அமைச்சர் திரு. ஏ. பி. ஜெயின் கர்னூலில் காங்கிரஸ் ஊழியர்கள் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"நாட்டின் எந்தப் பகுதியிலும் கோதுமையின் விலை 10 ரூபாய்க்கும் கீழ் குறைவதை அனுமதிக்கக் கூடாது என்பதே மத்திய சர்க்காரின் முடிவான தீர்மானமாகும்," என்று குறிப்பிட்டார்.

"இதற்காக மத்திய சர்க்கார் நூறு கோடி ரூபாய் வேண்டுமானுலும்கூட ஒதுக்கிவைக்கத் தயாராக உள்ளது; ஆனுல், மேற்கொண்டு விலைச் சரிவு ஏற்படாமலிருக்க மாநில சர்க்கார்கள் ஆங்காங்கு கோதுமைகளை வாங்குவதற்கு கண்காணிப்பாளர்கள் அடங்கிய அமைப்புகளை தாங்களே வைத்துக் கொள்ளவேண்டும்," என்றும் அவர் குறிப்பிட்டார்

கடன்காரர்களிடமிருந்து விவசாயிகளைப் பாதுகாப்பதற்காக கூட்டு முறையில் விவசாயிகளுக்குத் தேவையான பணத்தை அளிப்பதற்கான ஒழுங்கான அமைப்புள்ள கூட்டுச் சந்தைகளை ஆங்காங்கு ஏற்படுத்துவது பற்றியும் மத்திய சர்க்கார் ஆலோசித்து வருவதாகவும் கூறினர்.

"விவசாயிகளுக்கு முன்னதாகவே கடன் கொடுப்பதிலும் ஒரு புதிய முறையைக் கொண்டுவரவும் சர்க்கார் விரும்புகிறது; அதாவது, இதுவரையில் நிலத்தின் மீது கடன் கொடுத்து வந்ததற்குப் பதிலாக விளையவிருக்கும் தானியங்கள் மீது கடன் கொடுக்க ஆலோசித்து வருகிறது" என்று கூறியுள்ளார்.

ஏழை மாணவருக்கு இலவசக் கல்வி

ரூ. 100 வருமானமுள்ளவர்களுக்குச் சலுகை

சென்னை, மே 21—

வருகிற ஜூன் மாதம் முதல் ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகளில் படிக்கும் ஏழை மாணவர்களுக்கு, மூன்ரும் பாரம் வரையிலும் சம்பள விலக்கு அளிக்கப்பட வேண்டும் என்று சென்னை சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது.

இந்த சம்பள விலக்கு, அந்த மாணவர்களின் பெற்றேர், அல்லது பாதுகாப்பாளர் ஆகியோருக்கு எல்லா வகையிலுமிருந்து கிடைக்கும் மொத்த ஆண்டு வருமானம் ரூ. 1,200-க்குக் குறைவாக இருந்தால் தான் தரப்படுமாம்.

ஆனுல் இந்தச் சலுகை, மருத்துவ பரிசோதனைக்கான கட்டணம், 'லைப்ரெரி' கட்டணம், உடற்பயிற்சிக் கட்டணம் போன்றவைகளுக்குப் பொருந்தாது என்றும் தெரிகிறது.

இந்தச் சலுகைகளை, ஸ்தல ஸ்தாபனங்களின் கீழுள்ள பள்ளிகளுக்கு நிர்வாக அதிகாரிகளும், தனிப்பட்டோர் பள்ளிகளுக்கு அந்தந்தப் பள்ளியின் 'கரஸ்பாண்டெண்டு'களும் அளிப்பார்களாம்.

பெப்சு மாநிலத்தில் இலவசக் கல்வி

சர்க்கார் ஊழியர் குழந்தைகளுக்கு தரப்படும்

மாதம் ரூ 100 வரை சம்பளம் வாங்கும் சர்க்கார் ஊழியர்களின் குழந்தைகளுக்கு, நடுநிலைப் பள்ளி வகுப்புகள் வரை இலவசமாகக் கல்வி போதனைதர பெப்சு சர்க்கார் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

மாநிலங்களின் கல்வி திட்டங்கள்

மத்திய அரசாங்க கல்வி இலாகா சுற்றறிக்கை

புதுடில்லி, மே 20—

திட்டவட்டமாக உருவாக்கி, இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டியதற்கான கல்வித் திட்டங்களை மத்திய அரசாங்கக் கல்வி இலாகாவிற்கு அனுப்பி வைக்குமாறு மாநில அரசாங்கங்களுக்கு தாக்கீது அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

கல்வியைப் பரவச் செய்வது பற்றியும், இரண்டாம் திட்டம் பற்றியும் விவாதிப்பதற்காகக் கூடிய எல்லா மாநில கல்வி இலாகா டைரக்டர்களின் மாநாட்டின் பலனுக இந்தத் தாக்கீது அனுப்பப்பட்டிருக்கிறதாம்.

ஆந்திராவின் கல்வி, நீர்ப்பாசன திட்டங்கள்

ரூ. 250 கோடிக்கு தயாரிக்கப்பட்டுள்ளன

ஆந்திர மாநிலத்தில், நீர்ப்பாசனம், கல்வி ஆகிய இரண்டு துறை அபிவிருத்திக்கு மட்டும் ரூ. 250 கோடிக்குத் திட்டங்கள் தீட்டி அந்தந்த இலாகா அதிகாரிகள் சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறார்களாம்.

இத்திட்டங்கள், ஏற்கனவே, மாவட்டம், தாலுகா, கிராமங்கள் ஆகியவைகளுக்காக வகுக்கப்பட்டுள்ள திட்டங்களை நீக்கி மேற்கொண்டும் வகுக்கப்பட்டவைகளாம்!

பாசனத்திற்கு ரூ. 160 கோடிக்கும், கல்விக்கு ரூ. 90 கோடிக்கும் இதில் திட்டமிடப்பட்டிருக்கிறதாம்.

பஞ்சாபில் சர்க்கரை ஆலை

நிர்மாணிக்கும் பொறுப்பை பிரிட்டிஷ் நிறுவனம் ஏற்றுள்ளது

பஞ்சாபில் இரண்டு சர்க்கரை ஆலைகளை நிர்மாணிக்கும் பொறுப்பை பிரிட்டனைச் சேர்ந்த ஒரு ஸ்காட்டிஷ் தொழிற்சாலை ஏற்றுக் கொண்டிருக்கிறது. இடம் இன்னும் நிச்சயிக்கப்படவில்லை என்றாலும், இவை கூட்டுறவு முறையில் அமைக்கப்படும். இந்தத் தொழிற்சாலைகளில் தினசரி 1,000 டன்கள் கரும்பு பிழிய ஏற்பாடு செய்யப்படும்.

இதில் முக்கியமான அம்சம் இயந்திர சாதனங்களில் ஒரு கணிசமான பகுதியை இந்தியாவில் தயாரிக்க வேண்டும் என்பதாகும். ஆலை நிர்மாணப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கும் தொழிற்சாலையைச் சேர்ந்த நிபுணர்கள் இங்கு தங்கி, சேவைகளைத் தயாரித்துக் கொள்வார்கள். இந்தத் தொழிற்சாலை, ஏற்கனவேயே, இந்த நாட்டில் ஐந்து ஆலைகளைக் கட்டி முடித்திருக்கின்றன.

வெள்ளாடுகளை ஒழித்து விட......

விவசாய நிபுணர்கள் சிபாரிசு

புதுடில்லி, மே 20—

காடுகளையும், செடி கொடிகளின் வளமையையும் காப்பாற்றுவதற்காக வெள்ளாடுகளை ஒழிக்க வேண்டுமென்று, மத்திய சர்க்கார் விவசாய இலாகா நிபுணர்கள் சிபாரிசு செய்திருக்கின்றனராம்.

வெள்ளாடுகளையெல்லாம் கொன்றுவிட்டு அவைகளுக்குப் பதிலாகச் செம்மறி ஆடுகளை வைத்துக் கொள்ளலாமென்றும், அல்லது சொந்தத்தில் நிலமோ, தழை மரங்களோ வைத்திருப்பவர்கள்தான் வெள்ளாடுகள் வைத்துக் கொண்டிருக்கலாமென்றும் அந்த நிபுணர்கள் தெரிவித்திருக்கின்றனராம்.

சமாதானம் பற்றிய ருஷ்ய கொள்கையின் அடிப்படை

குருஷ்சேவ் கருத்து

"பல்வேறு சமுதாய அமைப்புகளுடன் கூடிய நாடுகளும் சமாதான முறையில் கூடி வாழ்வது சாத்தியமானதேயாகும்; இவ்வாறு கூடிவாழ்வது மிக அவசியமானதுங்கூட! இதனை ஒப்புக் கொள்வதுதான் ரஷ்ய வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படையுமாகும்."

இவ்வாறு ரஷ்ய கம்யூனிஸ்டுக் கட்சியின் செயலாளரான குருஷ்சேவ், மாஸ்கோவில் நடைபெற்ற தொழிலியல் மாநாட்டின் கடைசி நாள் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

தனது தலைமையில் யூகோஸ்லாவியா செல்லவிருக்கும் தூதுக் குழு 'திறந்த மன'துடனேயே அங்கு செல்ல இருப்பதாகவும், ரஷ்யாவுக்கும்—யூகோவிற்குமிடையே அரசியல் துறையில் 'சுமூக உறவு' நிலை ஏற்பட உத்தரவாதமளிக்கவே ரஷ்யக் குழு அங்கு செல்வதின் முக்கிய நோக்கமென்றும் அவர் கூறியிருக்கிறார்.

காங்கிரசைப் பிடித்துள்ள 'துரதிருஷ்டம்'

பண்டித நேரு பட்டியல் தருகிருர்!

"'துரதிருஷ்டவச'மாக, காங்கிரஸ் நிறுவனத்திற்குள் பல சுயநலவாதிகளும், 'விரும்பத்தகாத'வர்களும் புகுந்துகொள்ள ஆரம்பித்துவிட்டார்கள்; இவர்கள் செய்துவரும் காரியங்களனைத்தும், காங்கிரசின் 'நற்பெயரை'(!) அதிகப்படுத்துவதற்குப்பதிலாக மேலும் மேலும் இழுக்கையே தேடித் தருவனவாக இருக்கின்றன. அவர்களனைவரும் சுயநலத்துடன்தான் காங்கிரசில் நுழைந்திருக்கின்றனரே தவிர, நாட்டின் நலனைக்கருதி வரவில்லை; இத்தகையவர்களுக்குக் காங்கிரசில் இடமில்லை—இந்தப் பிரச்சினையில் மிகவும் கவனமாக இருக்கவேண்டும்; எனவே, இம்மாதிரியான 'பேர்வழி'களை உடனடியாகக் காங்கிரசிலிருந்து நீக்கிவிடவேண்டும்,"

—இவ்வாறு பிரதமர் நேரு பண்டிதர், புதுடில்லியில், அகில இந்திய காங்கிரஸ் குழு மாதர் இலாகா 'ஆர்கனைசர்'களுக்கு அறிவுரை கூறுகையில் குறிப்பிட்டிருக்கிருர்.

மேலும் அவர் சொன்ஞர் :—

"காங்கிரஸ் நிறுவனம் நாட்டு மக்களுக்கு உண்மையிலேயே பணியாற்ற வேண்டுமாஞல் 'நல்லவர்'கள் அதில் இருந்தால்தான் முடியும்; நாம் ஆள் சேர்ப்பது முக்கியமானதல்ல; எம்மாதிரியானவர்களைச் சேர்த்துக்கொள்கிருேம் என்பதுதான் முக்கியமான பிரச்சினையாகும்."

"சுதந்திரப் போராட்ட காலத்தில், பிரிட்டன் விசிய துப்பாக்கிக் குண்டுகளை நாம் சமாளிக்க வேண்டியவர்களாக இருந்தோம்; ஆனல் இன்று, நமது நிறுவனத்திற்குள்ளேயே இருக்கிற அபாயத்தைச் சமாளிக்க வேண்டியவர்களாக இருக்கிருேம்."

"சுய விளம்பரத்திற்காகவே காங்கிரசில் சேர்ந்துள்ள பலரால் காங்கிரஸ் நிறுவனத்தின் ஐக்கியத்திற்கும் ஒற்றுமைக்கும் பெரிய அபாயம் விளையும்; எனவே, இவர்களை உடனடியாக அகற்றிவிட வேண்டும்."

'வேலையில்லாத் திண்டாட்டமே நாட்டின் முக்கிய பிரச்சினே!'

'ஆள் பலம் அதிகமிருந்தும் உற்பத்திப் பெருக்கத்திற்கு உபயோகிக்கப்படவில்லை'

உண்மையை உணருகிருர் தொழில் நல அமைச்சர்

ஆமதாபாத், மே 20—

"வேலையில்லாத் திண்டாட்டம் தான் இப்போதுள்ள முக்கிய பிரச்சினை ஆகும்; தேவையான அளவிற்கு ஆள்பலம் இருந்தும் அது, உற்பத்திப் பெருக்கத்திற்குச் சரியான முறையில் உபயோகிக்கப்படவில்லை; ஆள் பலத்தைச் சரியாகப் பயன்படுத்திஞல் நாட்டின் செல்வம் பெருகி, அதஞல் மக்களின் வாங்கும் சக்தியும் அதிகரிக்கும்;

"கிராமங்களிலும் சிறு சிறு கைத்தொழில்களை ஆரம்பிக்க வேண்டும்; கிராமங்களிலுள்ள இலட்சக் கணக்கான ஆண், பெண்களுக்கு வேலையளிப்பதற்கு அதுதான் ஒரே வழியாகும்."

இவ்வாறு மத்திய சர்க்கார் தொழிலாளர் நல அமைச்சர் கந்துபாய் தேசாய், தோல்கா எனுமிடத்தில் நடைபெற்ற கிசான் மாநாடொன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் கூறியிருக்கிருர்.

மேலும் அவர், விவசாயப் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு நிலத்தின் செழுமையை அபிவிருத்தி செய்வதில் விவசாயிகள் கவனம் செலுத்த வேண்டுமென்றும், இந்தியாவில் ஏகர் ஒன்றுக்கு விளையும் கோதுமையின் அளவான 15 மணங்கை, போதிய கவனத்துடன் விவசாயம் செய்தால் 25 மணங்காகவும் ஆக்கலாம் என்றும், இதனை விவசாயத் தொழிலாளர்கள் அனைவரும் மறந்துவிடக்கூடாது என்றும் கேட்டுக்கொண்டிருக்கிருர்.

7 வயதுச் சிறுவனைக் குத்திக் கொன்ற பாலகன்

கதைப் புத்தகந்தான் காரணமாம்!

நியூயார்க்கிலுள்ள டேவிட் எனும் 14 வயதுள்ள சிறுவன் ஒருவன், தன்னுடன் விளையாடிக்கொண்டிருந்த 7 வயதான மற்றொரு சிறுவனை, கோடாரி, கத்தி ஆகிய ஆயுதங்களால் பலமாகத் தாக்கிக் கொன்றுவிட்டாஞம்!

மலையின் உச்சியிலிருந்து ஆட்களைத் தூக்கி எறிவது, பிறரைச் சித்திரவதை செய்வதுபோன்ற 'கட்டங்'கள் வரும் பல கதைப் புத்தகங்களை அவன் விரும்பிப் படிப்பது வழக்கமாம். அத்தகைய நிகழ்ச்சிகளைப் புத்தக வாயிலாகப் படித்ததுடன், நேரிலேயே அப்படிச் செய்து பார்க்கவேண்டும் என்ற எண்ணத்துடனேயே தன்னுடன் விளையாடிக்கொண்டிருந்த அந்தச் சிறுவனை மேற்கண்ட சித்திரவதை செய்து கொலை செய்ததாக போலீசார் அவனை விசாரித்தபோது கூறிஞஞம்.

குடிப் பழக்கத்தின் கொடிய விளைவுகளைத் தவிர்க்க!

குடிப்பழக்கத்தின் தீய விளைவுகளைத் தவிர்க்கும் நோக்குடன் தொழிற்சாலை வேலை நேரங்களில், இனி மது விற்பனை தடை செய்யப்படும் என்றும், தொழிலாளர்களுக்கு வேறு இனிய பானங்கள் தர ஏற்பாடு செய்யப்படும் என்றும் தெரியவருகிறது.

பிரான்சின் முன்ஞள் பிரதமரான மெண்டே பிரான்ஸ், கடந்த நவம்பரில் துவக்கிவைத்த மது எதிர்ப்பு இயக்கம் தொடர்ந்து நடைபெற்று வருவதாயும், அது பற்றி, மந்திரி சபை கூடி விவாதிக்கும் என்றும் தெரியவருகிறது.

பெரும் விபத்துக்களில் சிக்கிக் கொள்கிற கார் ஓட்டுபவர்கள் உடனடியாக இரத்தப் பரிசோதனை செய்யப்படுவர் என்றும் அறியக் கிடக்கிறது.

100-க்கு 47 விபத்துக்கள், மிதமிஞ்சிய குடியிஞல் ஏற்படுவதாகக் கணக்கிடப்பட்டிருப்பதிஞலேயே இந்தச் சோதனை ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

அதேபோல், கொள்ளை, கொலை, திருட்டு வேலையில் ஈடுபடுவோரும், பிடிக்கப்பட்டதும் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் இரத்தப் பரிசோதனை செய்யப்படுவர் என்றும் தெரியவருகிறது.

பொதுவில் குடிப்பழக்கம் கொடிய விளைவுகளைத் தருவதைத் தவிர்க்கவே இந்த புரட்சிகரமான ஏற்பாடுகள் என்று கூறப்படுகிறது.

கழகச் செய்திகள்

குரும்பலூர் தி. மு. கழக முதலாண்டு விழா

14—5—55-ல், ரேடியோமைதானத்தில் நடைபெற்ற கழக ஆண்டு விழாவில், தோழியர் அருண்மொழி அவர்கள் சொற்பொழிவாற்றிஞர்.

குன்னத்தூர் தி.மு.கழகம்

15—5—55 மாலை 4¼ மணிக்கு, கழக அலுவலகத்தில், தோழர் என். டி. இராமசாமி தலைமையில் நடைபெற்ற கழகச் செயற் குழுக் கூட்டத்தில், மாநில மாநாடு நிதிக்கு கழக உறுப்பினர்களிடம் நன்கொடை மூலம் பணம் வசூலிப்பதென முடிவு செய்யப்பட்டபின், மே தின விழாப் பொதுக் கூட்ட வரவு-செலவு பரிசீலிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.

சென்னை 42-வது வட்ட தி. மு. கழகம்

15—5—55 மாலை, கழகப் பணிமனையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில், 1—5—55ல் நடைபெற்ற மேதின விழா கூட்டத்தின் வரவு-செலவு பரிசீலிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டபின், இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை வரவேற்றும், தோழர் அண்ணுதுரை அவர்களின் அரிய பணியினை பாராட்டியும், முன்ஞள் மாவட்டச் செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான், புதிய மாவட்டச் செயலாளர் தோழர் இளம்பரிதி ஆகியோரைப் பாராட்டித் தேநீர் விருந்து அளிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

திருச்சி 20-வது வட்ட தி. மு. கழகம்

15—5—55 காலை 10 மணிக்கு, கழகக் கட்டிடத்தில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், கழக வரவு-செலவு கணக்கு சரி பார்த்து ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், பொதுச் செயலாளராக இரா. நெடுஞ்செழியன் அவர்களைத் தேர்ந்தெடுத்த பொதுக்குழுவினரைப் பாராட்டியும், முன்ஞள் பொதுச்செயலாளர் அண்ணு அவர்களுக்கு நன்றி தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

செட்டிக்குளத்தில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

16—5—55 இரவு 8 மணிக்கு, கருப்சடல் கிராம தி. மு. கழகச் சார்பில், செட்டிக்குளம் அண்ணு திடலில், தோழர் ஞா. சாமுவேல் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர் சா. சி. ராஜமணி தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசிஞர். அடுத்து, தோழர் அப்பாத்துரை அவர்கள் 'திராவிடர் நாகரீகம்' என்பது பற்றியும், தோழர் சேர்மத்துரை திராவிட நாடு பிரிவினை பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

ஆமதாபாத்— மணி நகர் 2-வது வட்ட தி. மு. க.

15—5—55 மாலை 6 மணிக்கு, மணிநகர் 2-வது வட்ட செயற்குழு கூட்டம் நடைபெற்றபோது வருகிற ஜூலை மாதம் கழக ஆண்டு விழா நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

சென்னை 10-வது வட்ட தி. மு. கழகம்

15—5—55 காலை 10 மணிக்கு, தோழர் தமிழ்தாசன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், கழகப் பணி மனை எடுப்பதென்றும், சென்னை மாவட்டச் செயலாளரைப் பாராட்டி தேநீர் விருந்தளிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

கீளுர் தி.மு.கழக அமைப்பு

17—5—55-ல், குன்ஞரை அடுத்துள்ள பெங்கால் மட்டத்தில், கீளுர் தி. மு. கழக அமைப்புக் கூட்டம், தோழர் வீ. கா. ஒளியழகன் தலைமையில் நடைபெற்றபோது, கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பின்னர், நகர தி. மு கழகச் சார்பில், தோழர் எஸ். அய்யப் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசிய பின்னர் கழகக் கொடியை ஏற்றிவைத்தார். தோழர் ஒளியழகன் கழகத் திவப்புவிழாவாற்றிஞர்.

எண்ணூர் தி. மு. கழகம்

17—5—55-ல் நடைபெற்ற கழக உறுப்பினர்கள் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர், ஏப்ரல் திங்கள் வரவு-செலவு கணக்குகள் பரிசீலிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், முன்ஞள் பொதுச் செயலாளர் அண்ணுதுரை, புதிய பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், மாவட்டச் செயலாளர் தோழர் கே. டி. எஸ். மணி ஆகியோரையும், எண்ணூரில் தி. மு கழகக் கிளையைத் துவக்க அரும்பாடுபட்ட தோழர் இ. வி. சேதுவையும் பாராட்டி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

* * *

26—5—55 இரவு 9 மணிக்கு, கழகப் பணிமனையில் செயற் குழுக் கூட்டம் நடைபெறும் என்று கிளைக் கழகச் செயலாளர் தோழர் மா. சூரியப்பிரகாசம் தெரிவித்துக் கொள்கிருர்.

திருப்பூர் நகர தி.மு. கழகம்

8—5—55 இரவு 9½ மணியளவில், தொ. ப. படிப்பகத்தில் தோழர் ஆர். ஈஸ்வரன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், புதிய பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இரா. நெடுஞ்செழியன் அவர்களை வரவேற்றும், முன்ஞள் பொதுச்செயலாளர் அண்ணுதுரை அவர்களைப் பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சேலம் நகர தி. மு. கழகம்

17—5—55 இரவு 9½ மணிக்கு, சேலம் நகரக் குழுக் கூட்டம், தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர் ஈ. எ. ஆர். இருளப்பன் இயற்கை எய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்தும், புதிய பொதுச் செயலாளர் இரா நெடுஞ்செழியன் அவர்களுக்குப் பாராட்டுதலும், முன்ஞள் பொதுச் செயலாளர் அண்ணு அவர்களுக்கு நன்றியும் தெரிவித்துக்கொண்டும், மாநில மாநாட்டுத் திறப்பாளராக தோழர் ஜீ. பி. சோமசுந்தரம் அவர்களைத் தேர்ந்தெடுத்தமைக்குப் பொதுக் குழுவைப் பாராட்டியும், 22—5—55ல் சேலம் வருகை தர இருக்கும் பொதுச் செயலாளரை சிறப்பான முறையில் வரவேற்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

திருப்பாலக்குடி தி. மு. க.

18—5—55 பகல் 1 மணிக்கு, தோழர் அ. நாகப்பன் இல்லில் நடைபெற்ற கழகச் செயற் குழுக் கூட்டத்தில், முன்ஞள் பொதுச் செயலாளர் அண்ணுதுரை, தஞ்சை மாவட்ட முன்ஞள் செயலாளர் கே கே. நீலமேகம் ஆகியோரைப் பாராட்டியும், புதிய பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தஞ்சை மாவட்ட புதிய செயலாளர் என். எஸ். இளங்கோ ஆகியோரை வரவேற்றும், மாநில மாநாட்டிற்கு, மாவட்டக் குழுவின் முடிவுப்படி, ரூ. 10 கொடுப்பது எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முல்லைவாடி தி. மு. கழகம்

18—5—55 இரவு 9 மணிக்கு, மாரி முடிதிருத்தகத்தில், தோழர் இல. வெங்கடராமன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற் குழுக் கூட்டத்தில், முன்ஞள் பொதுச் செயலாளர் அண்ணுதுரை அவர்களுக்கு நன்றியும், புதிய பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியனுக்குப் பாராட்டும் தெரிவித்துக் கொண்டதோடு; கழக வரவு-செலவுகள் பரிசீலிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டும், பொருளாளரின் பதவி விலகல் கடிதம் ஏற்றுக் கொள்ளப்பட்டும், தோழர்கள் ப அருணசலம், ந. முத்து ஆகிய இருவரையும் செயற் குழு உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொண்டும் பொருளாளராகத் தோழர் இல. வெங்கடராமன் அவர்களை தேர்ந்தெடுத்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ரண்டமங்கலம் தி. மு. க.

18—5—55 இரவு 8 மணிக்கு தோழர் கே. சின்னக்குட்டி தலைமையில் கழக உறுப்பினர் கூட்டம் நடைபெற்றபோது, 12—5—55ல் நடைபெற்ற பொதுக்கூட்ட, நாடக வரவு-செலவுகள் ஒப்புக்கொள்ளப்பட்டும், மாவட்ட அறிக்கைப்படி மாநில மாநாட்டிற்கு ரூ. 25 அனுப்புவதென்றும், நடக்கவிருக்கும் மாநில மாநாட்டிற்கு, சேலம் மாவட்டச் செயலாளர் தோழர் ஜீ. பி. சோமசுந்தரஞர் அவர்களைத் திறப்பாளராகத் தேர்ந்தெடுத்தமைக்கு பொதுக் குழுவைப் பாராட்டியும், மற்றும் கழக ஆக்கவேலைக்கான சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

திருப்பூரில் மே விழா

8—5—55 மாலை நொய்யல் நதியில் தோழர் ஆர். ஈஸ்வரன் தலைமையில் நடைபெற்ற விழாப் பொதுக் கூட்டத்தில், தோழர் பி. கிட்டப்பா சிறிது நேரம் பேசிய பின், தோழர் டி. கே. சீனுவாசன் மே விழா குறித்தும், திராவிட நாடு பிரிவினை குறித்தும் சொற்பொழிவாற்றிஞர்.

திருவாங்கூர் - கொச்சி மாநிலத்திலுள்ள ஆலப்புழையில், ரூ. 75 - லட்சம் செலவில் நிர்மாணிக்கப்படவிருக்கும் 'டி டி டி' மருந்து உற்பத்திச் சாலையில் ஆண்டொன்றுக்கு 1,400 டன் 'டி டி டி,' உற்பத்தி செய்ய முடியும்.

ஆண்டவனின் கிரீடத்தை அபகரித்துச்சென்றபக்தர்

விற்க முயலுகையில் கைது செய்யப்பட்டார்!

பம்பாயிலுள்ள ஜைனர் கோயில் ஒன்றில் நுழைந்த பக்தர் ஒருவர், கோயிலில் பள்ளி கொண்டிருந்த கடவுளின் தலையில் வைக்கப்பட்டிருந்த வெள்ளி கிரீடத்தை அபகரித்துச் செல்லத் துணிந்துவிட்டார்.

கோயிலில் அவர் நுழைந்த சமயம், அர்ச்சகர் வெளியே போயிருந்ததால், 'இதுதான் தக்க தருணம்' என்று நினைத்த அந்த 'பக்தர்,' ஓசைபடாமல் கிரீடத்தை எடுத்துச் சென்றுவிட்டார்.

பிற்பகலில் வந்த மற்ற பக்தர்கள் இத்திருட்டைக் கண்டுபிடித்து உடனடியாகப் போலீசில் புகார் செய்தனர்.

கிரீடத்தை அபகரித்துச் சென்ற பக்தர், ஒரு கடையில் அதை விற்க முயலுகையில் போலீசாரால் கைது செய்யப்பட்டாராம்!

பாகிஸ்தான் பஞ்சாபில் மந்திரி சபை கலைப்பு!

நிலையற்ற தன்மையின் தொடர்ச்சியா?

பாகிஸ்தான் பஞ்சாபில், மாலிக் பெரோஜ்கான் தலைமையில் இயங்கிவந்த மந்திரி சபையை கவர்னர் எம். ஏ. குர்மானி சென்ற 21-ந் தேதி, 'டிஸ்மிஸ்' செய்திருக்கிறார்.

பெரோஜ்கான் மந்திரி சபையில் அங்கம் வகித்து, அண்மையில் தமது பதவியைத் துறந்த முன்னாள் விவசாய மந்திரி சர்தார் அப்துல் ஹமீது தஸ்தியை ஒரு இடைக்கால அமைச்சரவை அமைக்கும்படி கவர்னர் அழைத்தார்.

கவர்னர் அழைப்பை ஏற்றுக்கொண்ட தஸ்தியின் தலைமையில் 7 அமைச்சர்களடங்கிய புதிய மந்திரி சபை உருவாகியிருக்கிறது

இந்தியப் பிரிவினைக்குப் பின்னர் பாகிஸ்தான் பஞ்சாபில் ஏற்படும் 4-வது மந்திரி சபையாகும் இது!

இந்த இடைக்கால மந்திரி சபை, மேற்கு பாகிஸ்தான் ஒரு 'யூனிட்'டாக அமைக்கப்படுவதற்கான திட்டம் அமுலாகும் வரையிலும் பதவியில் நீடித்திருக்குமாம்.

சென்ற சில காலமாகவே, முன்னாள் அமைச்சர் மாலிக் பெரோஜ்கான் நூனுக்கும் கவர்னர் குர்மானிக்குமிடையே தகராறு வலுத்து வந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது.

பாகிஸ்தான் புதிய அரசியல் நிர்ணய சபைக்கு பாகிஸ்தான் பஞ்சாபிலிருந்து ஆறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது சம்பந்தமாக பஞ்சாப் சட்ட சபை லீக் கட்சியில் கடந்த ஒரு மாதகாலமாகவே பிளவு இருந்து வந்திருக்கிறது. சென்ற 22-ந் தேதியன்று கூடிய லீக் கட்சிக் கூட்டம், இந்த ஆறு உறுப்பினர்களையும் மந்திய சர்க்கார் தங்கள் விருப்பம்போல் பொறுக்கிக் கொள்ளலாம் என்று தீர்மானம் ஒன்று நிறைவேற்றியிருக்கிறது. அப்போது இத்தீர்மானத்தை எதிர்த்து 25-க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் வெளியேறியிருக்கின்றனர்.

இந்த உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கும் பிரச்சினையில் தௌலத்தானா குழுவிற்கும் நூன் குழுவினருக்குமிடையே உடன்பாடு ஏற்படாமையால் நூனின் அமைச்சரவையிலிருந்து 4 மந்திரிகள் விலகிக் கொண்டனர்.

இந்த அரசியல் நெருக்கடியைத் தீர்த்துவைக்க பாகிஸ்தான் பிரதமர் முகமதலி கடந்த ஏப்ரல் 30-ந் தேதியன்று லாகூருக்குச் சென்றிருந்தார்; எனினும் சமரச முயற்சிகள் எதுவும் பலிக்காமல் திரும்பினார்.

தற்போது 'டிஸ்மிஸ்' செய்யப்பட்ட மந்திரி சபையின் தலைவரான பெரோஜ்கான் நூன்,ஜின்னாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களில் ஒருவராவார்.

கோவா பிரச்சினைக்கு இராணுவ நடவடிக்கையே பரிகாரமாம்!

பெல்காம், மே 22—

"இந்தியப் போரசு இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளுவதுதான் கோவா பிரச்சினைக்கு ஒரே பரிகாரமாகும்,"

என்று சேனாபதி பாபட் என்ற 75 வயதான கோவா அறப்போர் தலைவர் குறிப்பிட்டிருக்கிறார்.

"பலாத்காரமற்ற கிளர்ச்சிகளுக்கு உரிய மதிப்பு இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை; ஆனால், கோவாவில் உள்ள போர்த்துகீசிய அரசாங்கம் போன்ற—பிரச்சினைகளுக்கு அமைதியான பரிகாரம் காண விரும்பாத அரசாங்கங்களின் மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்வது தவிர்க்க முடியாததாகி விடுகின்றது," என்றும் அவர் கூறியிருக்கிறாராம்.

கடந்த 19-ந் தேதியன்று விடுதலை செய்யப்பட்ட அவரது மார்பு, இடது கரம், தலை ஆகியவற்றிலெல்லாம் தடியடித் தழும்புகள் இருந்தன என்றும், அவர் தனி கார் மூலம் பெல்காம் வந்துள்ளார் என்றும் கூறப்படுகிறது.

★

பெல்காம், மே. 22—

கோவா அறப்போருக்குத் தலைமை தாங்கிய மகாராஷ்டிர பி.சோ. கட்சித் தலைவரான என். ஜி. கோரே கோவாவில் சிறைவைக்கப்பட்டுள்ளார் எனத் தெரிகிறது.

திரு கோரேயை கோவா அதிகாரிகள் கடுமையாகத் தாக்கி அடித்துத் துன்புறுத்தியதாகவும், மிருகத்தனமான வெறிச் செயல்களால் அவரை மோசமாக நடத்தியதாகவும் கூறப்படுகிறது. இதனை ஆட்சேபிக்கும் வகையில் திரு. கோரே கடந்த இரண்டு நாட்களாக உணவு உட்கொள்ள மறுத்து வருவதாகவும் கூறப்படுகிறது.

★

கோவா சத்தியாக்கிரகிகளைத் தாக்குமாறு இராணுவத்தினர் பிறப்பித்த உத்தரவை நிறைவேற்ற மறுத்ததற்காக கோவாவிலுள்ள போர்ச்சுகீசியரல்லாத போலீஸ் அதிகாரிகள் பெரும்பான்மையோர் வேலையிலிருந்து 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது

சென்ற 18-ந் தேதியன்று கோவாவிற்குள் நுழைந்த முதல் சத்தியாக்கிரகக் குழுவினர் கடுமையாகத் தாக்கப்பட்டது குறித்தும், சத்தியாக்கிரகிகள் நடத்தப்படும் விதம் குறித்தும் போர்ச்சுகீசியரல்லாத போலீஸ் அதிகாரிகள் வெகுவாக வெறுப்புற்றிருக்கின்றனராம்.

திட்டங்களில்.....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கோடிக்கு புது வரி விதிப்பது அசாத்தியமானதல்ல.

"பெரிய முதலீட்டுத் துறையில் கடன் மூலமாகவும், சிறு சிறு சேமிப்புகள் மூலமாகவும் ரூ. 1,000 கோடி இந்தியாவால் எழுப்பப்பட முடியும்; மீதியாக உள்ள ரூ. 1,400 கோடியும், அந்நிய நாடுகளின் உதவி மூலம் பெறவேண்டியிருக்கும்; இதில் ரூ. 500 கோடிதான் அந்நிய நாடுகளிலிருந்து உதவியாகப் பெற முடியும்; மீதியாகத் தேவைப்படுகிற ரூ. 900-கோடியை எங்கிருந்து, எப்படிப் பெறுவது என்று கூறுவதற்கில்லை

"குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் ஆகியவற்றின் அபிவிருத்திக்காக ரூ. 200 கோடி செலவிடப்படும். இது, மக்களிடையே நிலவும் வறுமையைப் போக்கவும், அவர்களின் அன்றுட வாழ்க்கைக்குத் தேவையான பண்டங்களைத் தயாரிக்கவும் முக்கியமாகும்.

"மாநிலங்களுக்கு நிதி ஒதுக்குவது, நிதிக் குழு செய்கின்ற சிபாரிசுகளைப் பொறுத்தே இருக்கிறது. மதுவிலக்கு ஏற்படுத்தின மாநிலங்களுக்கும், ஏற்படுத்தாத மாநிலங்களுக்கும் இடையே நிதி ஒதுக்குவதில் எவ்வித பாரபட்சமும் காட்டப்பட மாட்டாது."

இவ்வாறு குறிப்பிட்ட அவர் மேலும், "ரூ. 6,300 கோடிக்கு அபிவிருத்தித் திட்டங்களைபெல்லாம் வகுத்துவிட்டு, அதே நேரத்தில் 'அயல் நாடுகளின் உதவி வேண்டாம்' என்று கூறி நிராகரிப்பது சாத்தியமல்ல" என்றும் குறிப்பிட்டார்.

* *

தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டு நிதிக்காக

சிறப்புக் கூட்டம்

24—5—1955 செவ்வாய் மாலை 6 மணிக்கு

சென்னை கோகலே மண்டபத்தில்

தோழர் **கே. ஏ. மதியழகன்** தலைமையில்

தோழர் சி. என். அண்ணாதுரை

சொற்பொழிவாற்றுவார்

நன்கொடை: ரூ. 1—0—0 அணு 0—8—0

—சென்னை மாவட்ட தி. மு. கழகம்

* *

தி. மு. க. பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன் தூத்துக்குடி வருகை

வரவேற்பு ஏற்பாடுகள்

"29—5—55 ஞாயிறு பகல் 12-30 மணி இரயிலில் தூத்துக்குடி வந்து சேரும் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு புகைவண்டி நிலையத்தில் பெரியதோர் வரவேற்பு கொடுக்கப்படும்.

"மாலை 3-30 மணிக்கு, செல்விசியர் தெருவிலுள்ள சி. எம். பள்ளியில் கழக ஊழியர்களின் சார்பில் விருந்து உபசாரமும், ஊழியர் கூட்டமும் நடைபெறும்.

"4-30 மணிக்கு போல்நாயக்கன்பேட்டை தி. மு. கழக உட்கிளையை ஆரம்பித்துவைப்பார்.

"மாலை 5 மணிக்கு, தோழர் கே. வி. கே சாமி தலைமையில், போல்நாயக்கன்பேட்டையிலிருந்து முக்கிய தெருக்கள் வழியாக ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார்.

"இரவு 7 மணிக்கு, வ. உ. சி. மைதானத்தில், தோழர் எம். எஸ். சிவசாமி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும்; பொதுக்கூட்டத்தில், நெல்லை மாவட்டக் கழகச் சார்பிலும், நகரிலுள்ள 16 தி. மு. கழக உட்கிளைகளின் சார்பிலும் வரவேற்பும், மாநில மாநாட்டு நிதியும் அளிக்கப்படும்,"

என்று, தூத்துக்குடி நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் எம். எஸ். சிவசாமி அறிவிக்கிறார்.

தூத்துக்குடியில்

பொதுச் செயலாளரிடம்

மாநாட்டு நிதி அளிப்பு

நெல்லை மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் கே.வி.கே. சாமி அறிவிப்பதாவது:—

"29—5—55 அன்று, தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் நெல்லை எக்ஸ்பிரசில் தூத்துக்குடி வருகிறார். பொதுச்செயலாளரை வரவேற்க, தூத்துக்குடி தி. மு. கழகத்தின் சார்பில் பெரிய அளவில் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. அக்கூட்டத்தில், நெல்லை மாவட்ட தி. மு. கழகத்தின் சார்பில் மாநில மாநாட்டு நிதி பொதுச்செயலாளர் அவர்களிடம் கொடுக்கப்படும். அனைவரும் கலந்துகொள்வதுடன், கிளைகள் விகிதப்படி தொகையை 25—5—55-ந் குள், நெல்லை மாவட்ட தி. மு. கழகப் பொருளாளர் அவர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டுகிறேன்."

தலைமை ஆசிரியருக்கு தண்டனை

பொய் நற்சாட்சிப் பத்திரம் வழங்கினாராம்!

போலீஸ் கான்ஸ்டேபிள் வேலைக்கு, ஆமதாபாத் கிராமமொன்றைச் சேர்ந்த ஒருவருக்குப் பொய் எஸ் எஸ் எல். சி. நற்சாட்சிப் பத்திரம் வழங்கியதாக, அங்குள்ள ஆரம்பப் பள்ளி ஒன்றின் தலைமை ஆசிரியர் மீது குற்றஞ் சாட்டப்பட்டு, 3 மாத சிறைத் தண்டனையும் ரூ 100 அபராதமும், அபராதம் கட்டத் தவறினால் மேலும் கூடுதலாக இரண்டு மாத சிறை தண்டனையும் ஆமதாபாத் மாஜிஸ்திரேட் விதித்துள்ளார்.

மெக்கா யாத்திரைசாலை:

பாகிஸ்தான்-மூடுகிறது

மெக்காவிற்கு 'அஜ்' யாத்திரை செல்லும் சாலை வழியை பாகிஸ்தான் அரசாங்கம் 'மூடி'விட்டதாகத் தெரிகிறது

பெர்ஷியா, ஈராக் வழியாக, யாத்திரிகர்கள் பிரயாணம் செய்வதில் உள்ள கஷ்டங்கள் பற்றி சர்க்காருக்கு முறையிடப்பட்டதை ஒட்டி சர்க்கார் இதைச் செய்திருப்பதாக அதிகார பூர்வமாகத் தெரியவருகிறது.

வேலை நிறுத்தத்தின் எதிரொலி

ஆலைகளின் நிலை ஆராய குழு நியமிக்கப்படுகிறது

கான்பூர், மே 22—

கான்பூரில் ஆலைத் தொழிலாளர் மேற்கொண்டுவரும் வேலை நிறுத்த நிலையில் மேலும் அபிவிருத்தி ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. நேற்று, 'முதல் ஷிப்டு' வேலைக்கு வரவேண்டிய மொத்தம் 22,000 தொழிலாளர்களில் 15,000 பேர் வேலைக்கு வந்ததாகக் கூறப்படுகிறது.

46,000 தொழிலாளர்கள் வேலை செய்கின்ற 10 கான்பூர் ஆலைகளில் தொழிலாளர் வேலை நிறுத்தம் தொடங்கி இதுவரை மூன்று வாரங்களாகின்றன.

ஆலைகளின் உத்தேசச் சிக்கனச் சீரமைப்புத் திட்டங்களைக் குறித்து ஆராய, மாநில சர்க்கார் ஒரு ஆராய்ச்சிக் குழு நியமித்துள்ளதாயும் மாநில தொழிலாளர் நல அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

மஞ்சள் மழை!

கொழும்பு, மே 22—

கண்டி நகரையடுத்துள்ளசிற்சில பகுதிகளில் நேற்று மஞ்சள் மழை பொழிந்ததாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

இந்த மஞ்சள் மழை சில நிமிட நேரம் வரைதான் பெய்ததாம்.

மழையில் நனைந்தவர்களுடைய உடலிலும் ஆடைகளிலும் மஞ்சள் நிறக் கறைபடிந்திருந்ததாகவும், தெருக்களெல்லாம், மஞ்சள் நீர் கொட்டப்பட்டவைபோல் காணப்படுகின்றன என்றும் கூறப்படுகிறது

கழகக் கூட்டங்கள்

★

காளி

25—5—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: பி. எம், அனிபா

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு

என். கிட்டப்பா

கே. எஸ். சௌந்தரராசன்

★

பொத்தனூர்(சேலம் மாவட்டம்)

திரு. வி. க. திடலில்

25—5—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: க. சிவப்பிரகாசம்

பேசுவோர்:

க. அன்பழகன்

ஜி. பி. சோமசுந்தரம்

ஈ. ஆர். கிருஷ்ணன்

இரா. சண்முகம்

அன்று இரவு, தோழர் ஜி. பி. சோமசுந்தரம் தலைமையில், வள்ளுவர் நாடக மன்றத்தாரால், 'பரப்பிரம்மம்'—நாடகம் நடைபெறும்.

★

குளித்தலை

வ. உ. சி. சதுக்கத்தில்

25—5—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: மா. அர்த்தநாரி

பேசுவோர்:

கி. மனோகரன்

தி. வீ. முத்துகிருஷ்ணன்

★

மேட்டுப்பாளையம் (தஞ்சை)

25—5—55 மாலை 5 மணிக்கு

தலைவர்: ந. தருமலிங்கம்

பேசுவோர்:

என். எஸ். இளங்கோ

சத்தியவாணிமுத்து

திருக்குறள் வகுப்பு

24—5—55 பிற்பகல் 2-30 மணிக்கு, சென்னை, முத்துகிருஷ்ணன் தெரு, 15-ம் எண்ணுள்ள இல்லத்தில், தாய்மார் கழகச் சார்பில் நடைபெறும். 'இறை மாட்சி' என்பது குறித்து, திரு. மயிலை சிவமுத்து, திருமதி சாமுண்டீஸ்வரி ஆகியோர் பேசுவர்.

சத்தியவாணிமுத்து

சுற்றுப்பயணம்

மே 25: மேட்டுப்பாளையம் அரிக்காடு

26: கரியாப்பட்டினம் காலை: திருமணம் மாலை:பொதுக்கூட்டம்

27: புனல்வாயில்

29: பட்டுக்கோட்டை

முகவரி மாற்றம்

நாஞ்சில் பி. ஏ. கண்ணப்பா, ஈத்தாமொழி, நாகர்கோயில், தென் திருவாங்கூர்.

'புண்ணிய யாத்திரை'யா?

கங்கைக்கு இருவர் பலி!

அலகாபாத், மே. 22—

கங்கை நதியில் குளிப்பதற்காகச் சென்ற ஒரு பெண்ணையும், அவரது எட்டு வயதுடைய மகன் ஒருவனும், நதியில் மூழ்கி மரணமுற்றனராம்.

இவர்கள் 'திரௌபதி கட்டத்'தில் குளிக்கச் சென்றிருந்தனராம். அப்போது, அந்த எட்டு வயது சிறுவனை வெள்ளம் அடித்துச் செல்வதைக் கண்டதும் அவனது தாயார், அவனைக் காப்பாற்றுவதற்காக நீரில் குதித்ததாகவும், அவனையும் சேர்த்து 'கங்கை' நதி இழுத்துச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா நெடுஞ்செழியன், எம். ஏ.